முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2025 யூலை

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2025-07-26
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல.* **1.1** *தொடக்கம்* **1.6** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.1** பின்வருவனவற்றில் இறுதி மேன்முறையீடு தொடர்பான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிமன்றம் எது?

(1) மாவட்ட நீதிமன்றம்
(2) உயர் (Supreme) நீதிமன்றம்
(3) நீதிவான் நீதிமன்றம்
(4) மேல் (High) நீதிமன்றம்

**1.2** பின்வருவனவற்றில் எது வடக்கு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு மாத்திரம் பொருந்தும் சட்டமாகும்?

(1) முஸ்லிம் சட்டம்
(2) ஆங்கிலச் சட்டம்
(3) கண்டியன் சட்டம்
(4) தேசவழமைச் சட்டம்

**1.3** பின்வருவனவற்றில் கைமாற்றத்தகு சாதனங்களின் ஒரு பண்பாக (characteristic) **இருப்பது** எது?

(1) சாதனத்தின் உரித்து, விநியோகித்தவுடன் மாற்றப்படலாம்.

(2) கைமாற்றத்தகு சாதனங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

(3) சாதனத்தை வைத்திருப்பவர் தனது சொந்தப் பெயரில் அதன் மீது வழக்குத் தொடரலாம்.

(4) பரிமாற்றம் பெறுபவர் அச்சாதனத்தின் நல்லுரித்தைப் பெறுகிறார்.

**1.4** பின்வருவனவற்றில் எது சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறை **அல்ல**?

(1) மாற்றுண்டியல் (2) காசோலைகள்

(3) திறந்த கணக்கு ஊடான கொடுப்பனவு (4) முற்பணக் கொடுப்பனவு

**1.5** பின்வருவனவற்றில் விற்பனையாளருக்குக் கிடைக்கக்கூடிய ஒரு நிவாரணமாக அமைவது எது?

(1) பொருள்கள் விநியோகிக்கப்படாமைக்கு எதிரான நடவடிக்கை

(2) மீள் விற்பனைக்கான உரிமை

(3) உத்தரவாதங்களை மீறியதற்காக இழப்பீடு கோரும் உரிமை

(4) குறிப்பிட்ட செயலாற்றுகையைப் பெற்றுக்கொள்ளுதல்

**1.6** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் தொடர்பில் பின்வருவனவற்றில் எது **சரியானதல்ல**?

(1) பொருள்களின் விற்பனை ஒப்பந்தத்தில் பணவியல் தொடர்பான கருத்தியல் ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) விற்பனையாளர் பொருள்களின் உரிமையை வாங்குபவருக்கு மாற்ற வேண்டும் அல்லது அவ்வாறு செய்ய ஒப்புக் கொள்ள வேண்டும்.

(3) விற்பனை ஒப்பந்தம் எழுத்துபூர்வமாக மட்டுமே செய்ய முடியும்.

(4) பொருள்களின் விற்பனைச் சட்டம் தொடர்பான உட்கிடை நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்கள் உள்ளன.

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக..*

**1.7** பொருள்களின் விற்பனை ஒப்பந்தத்தின் படி, ஒப்பந்த விடயப்பொருள் பொருள்களாக இருத்தல் வேண்டும்.

**1.8** நிச்சயிக்கப்பட்ட (குறிப்பான) பொருள்கள் என்பது தரப்பினரால் ஒப்புக்கொள்ளப்பட்டு, ஆனால் இன்னும் முறையாக அடையாளம் காணப்படாத பொருள்களைக் குறிக்கிறது.

**1.9** மாற்றுண்டியல் ஒன்றின் வரையுநர் (drawee) எப்போதும் வங்கியாகவே இருக்கும்.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** "CIF (கிரயம், காப்புறுதி மற்றும் கப்பற்கேள்வு) உடன்படிக்கையில்" வாங்குபவருக்கு விற்பனை யாளரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இரண்டு (02) ஆவணங்களைக் குறிப்பிடுக.

**1.11** 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின் பிரதான நோக்கத்தைக் குறிப்பிடுக.

**1.12** மாற்றுண்டியல் ஒன்றின் புறக்குறிப்பிடல் என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.13** முதலீட்டுச் சபையின் இரண்டு (02) தொழிற்பாடுகளைக் (functions) குறிப்பிடுக.

**1.14** கைமாற்றத்தகு சாதனங்களுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**மினுகி** என்பவர் இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்கின்ற ஒரு சிறிய வணிகத்தின் உரிமையாளர் ஆவார். சமீபத்தில் அவர் **ஷாமா** என்பவரை தீவு முழுவதும் விற்பனையைக் கையாளும் பொருட்டு தனது முகவராக நியமித்தார். மீள் விற்பனை நோக்கத்திற்காக இலத்திரனியல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கும் **மினுகியின்** சார்பாக உடன்படிக்கைகளில் கையெழுத்திடுவதற்கும் **ஷாமாவுக்கு** அதிகாரம் வழங்கப்பட்டது. ஒரு நாள், **ஷாமா** ஒரு பெரிய அளவிலான இலத்திரனியல் உபகரணங்களுக்காக வழங்குநருடன் ஒப்பந்தம் செய்தார். ஆனால் ஒப்பந்தத்தின் விவரங்களை **மினுகிக்கு** தெரிவிக்கவில்லை. கட்டளையைப் பெற்றவுடன், அதே உபகரணங்களுக்கு வழக்கமாகச் செலுத்தும் விலையை விட அதன் விலை அதிகமாக இருப்பதை **மினுகி** உணர்ந்தார். எனவே, இந்தப் பரிவர்த்தனையினால் **மினுகி** நட்டத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேலேயுள்ள சூழ்நிலையில் முகவராண்மைச் சட்டத்தின் கீழ், **ஷாமாவினால்** கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கு **மினுகி** கட்டுப்பட்டவரா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **ஷாமாவிடமிருந்து** சேதச் செலவுகளை (cost of damage) **மினுகி** மீட்டெடுக்க முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ஆன்** என்பவர் 2016 ஏப்ரல் 01 இல் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றில் ரூ. 100,000/- சம்பளத்தில் சேர்ந்தார். அவருக்கு 2025 யூலை 01 ஆந் திகதியில் இருந்து BPO கம்பனியில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. எனவே அவர் தனது பணி விலகல் கடிதத்தை 2025 யூன் 30 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சமர்ப்பித்துள்ளார். அவருடைய இறுதி மாதச் சம்பளம் ரூ. 300,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பணி விலகலின்போது, **ஆன்** இனுடைய பணிக்கொடை உரித்தினைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் ஊழியர்களுக்கு உரித்துடைய மூன்று (03) வகையான விடுப்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பணியிடத்தில் ஊழியர்களுக்கு உரித்துடைய மூன்று (03) மனித உரிமைகளை **அடையாளங் காண்க.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**சமந்தா** என்பவர் கொழும்பில் ஒரு சிறிய சில்லறைக் கடை வைத்திருக்கிறார். அவர், திருட்டு மற்றும் சொத்து சேதத்திலிருந்து தனது கடையைப் பாதுகாக்க **Secure Insurance Ltd.** இடமிருந்து காப்புறுதியைப் பெற்றுள்ளார். காப்புறுதி விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது, அவரது கடையில் CCTV கமெரா அமைப்பு செயற்படுகிறதா என்று கேட்கப்பட்டிருந்தது. அதற்கு அவர், சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட அனைத்து கமெராக்களும் இன்னும் நல்ல நிலையில் இயங்குகின்றன என நம்பி, "ஆம்" என்று தவறாகக் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், CCTV அமைப்பு கடந்த மூன்று மாதங்களாக சரியாகச் செயற்படவில்லை என்பதுடன் அவர் அதைப் பரீட்சிக்கவோ அல்லது பழுதுபார்க்கவோ இல்லை.

சில மாதங்களுக்குப் பிறகு, **சமந்தாவின்** கடையில் திருட்டு நடந்தது. ஏற்பட்ட இழப்புக்காக **Secure Insurance Ltd.** இடம் இழப்பீடு கோரி அவர் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார். விசாரணையின்போது, திருட்டு நடந்த நேரத்தில் CCTV அமைப்பு செயல்படவில்லை என்பதையும் காப்புறுதியைப் பெற்றுக்கொண்ட தருணத்திலும் அது செயல்படவில்லை என்பதையும் காப்புறுதிக் கம்பனி கண்டறிந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) திருட்டினால் ஏற்பட்ட இழப்புக்காக **Secure Insurance Ltd.** இடமிருந்து இழப்பீட்டினைப் பெறுவதற்கான காப்புறுதிக் கோரிக்கையை **சமந்தாவால்** முன்வைக்க முடியுமா என்பதை **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(b) காப்புறுதியில் "பதிலாளளிப்புக் (Subrogation) கோட்பாட்டை" **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) காப்புறுதி ஒப்பந்தமொன்றின் மூன்று (03) கூறுகளைக் (elements) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**அமரா** என்பவர் ஓர் இளம் தொழில் முனைவோராவார். அவர் ஆதன முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு கம்பனியான **XYZ (Pvt) Ltd.** இனை நிறுவினார். அவர் ஒரு தனிப் பங்காளராகவும் கம்பனியின் பணிப்பாளராகவும் இருந்த போதிலும் அனைத்து சட்ட முறைகளையும் பின்பற்றுகிறார். **XYZ (Pvt) Ltd.** வியாபார விரிவாக்கத்திற்காக **தேசிய வங்கியிடமிருந்து** ரூ. 500,000/- கடன் பெற்றுள்ளது. துரதிஷ்டவசமாக, பொருளாதார மந்த நிலை காரணமாக கம்பனி நிதி ரீதியாகச் சிரமப்பட்டு வங்கிக் கடனுக்கான தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியது.

வங்கி **அமராவுக்கு** எதிராக தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடர்ந்தது. அவர் கம்பனியை முழுவதுமாக வைத்திருப்பதால், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவர் பொறுப்பேற்க வேண்டுமென வாதிடப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) "தனியான சட்ட ஆளுமை"க் கோட்பாட்டைத் தொடர்புபடுத்தி, **XYZ (Pvt) Ltd.** இன் கடன்களுக்கு **அமரா** தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவரா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கம்பனி வைத்திருக்க வேண்டிய சட்டபூர்வ ஏடுகள் மற்றும் பதிவேடுகள் மூன்றைப் (03) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(c) *"ஒரு கம்பனி கம்பனியின் அமைப்பக விதிகளின் அடிப்படையில் யாதாயினும் வணிகம் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது ஏதேனும் செயல் அல்லது ஏதேனும் பரிவர்த்தனையில் ஈடுபட வேண்டும்."*

மேற்படி கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

ஹப்புத்தளை என்ற இடத்திலுள்ள ஒரு சிறிய கிராமமானது, அந்தப் பகுதியிலுள்ள குறிப்பிட்ட காலநிலை மற்றும் மண்ணின் இயல்புகள் காரணமாக அதன் தனித்துவமான சுவைக்குப் பெயர் பெற்ற **ஹப்புத்தளை-தேயிலை** என்ற ஒரு தனித்துவமான வகைத் தேயிலையை உற்பத்தி செய்வதற்குப் பெயர்பெற்றது. காலி மாவட்டத்தைச் சேர்ந்த தேயிலை உற்பத்தியாளர் ஒருவர் இதே போன்ற தேயிலையை அதே பெயரில் சந்தைப்படுத்தத் தொடங்கினார். இது ஹப்புத்தளையில் இருந்து வருவதாகக் கூறினார். ஹப்புத்தளை கிராமத்தைச் சேர்ந்த தேயிலை உற்பத்தியாளர்கள், இந்தத் தவறான பிரதிநிதித்துவம் தங்கள் நற்பெயருக்கும் விற்பனைக்கும் தீங்கு விளைவிக்கும் என்று கவலைப்படுகிறார்கள்.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) புலமைச்சொத்துச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பின்வரும் புலமைச் சொத்துக்களை **விபரிக்குக** :

(i) வணிகக் குறி (Trade Mark).

(ii) காப்புரிமை (Patent). (04 புள்ளிகள்)

(b) ஹப்புத்தளை கிராமத்தின் தேயிலை உற்பத்தியாளர்கள், தங்களது தேயிலையின் பெயர் காலி மாவட்ட உற்பத்தியாளரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிராக தமது தேயிலையின் தனித்துவ அடையாளத்தைப் பாதுகாக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

(A) கொழும்பில் உள்ள ஒரு உள்ளரங்க அரங்கத்தில் நடைபெற்ற மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இசை நிகழ்ச்சியில் **தினுக**வும் அவரது தோழிகளில் ஒருவரான **ஹாசினியும்** கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் சர்வதேசப் பிரபல கலைஞர்களும் ஏராளமானோரும் கலந்து கொண்டனர்.

வாகன நிறுத்துமிட உதவியாளரின் வழிகாட்டுதலின்பேரில், **தினுக** தனது காரை அரங்கத்தின் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தினார். நிறுத்தப்படும் வாகனத்தில் ஏற்படும் சேதங்கள் மற்றும் திருட்டுகளுக்கு ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள் என்று வாகன நிறுத்துமிட உதவியாளர் **ஹாசினி** மற்றும் **தினுக**விடம் தெரிவித்திருந்தார். அரங்கத்திற்குள் நுழைவதற்கு முன், அவர்கள் நுழைவுச் சீட்டுக்களை கரும பீடத்தில் வாங்கினார்கள்.

அவர்கள் நுழைவுச் சீட்டுகளைப் பெற்றதும், காசாளர் நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குறிப்பை அவர்களிடம் சுட்டிக் காட்டினார் :

"இந்த நுழைவுச்சீட்டை வாங்குவதன் மூலம், அரங்கத்தினுள் தொலைந்து போன அல்லது திருடப்பட்ட எந்தவொரு பொருளுக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பொறுப்பல்ல என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள்."

நுழைவாயிலில், மற்றொரு அறிவிப்புப் பலவை முக்கியமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் கூறப்பட்டிருப்பதாவது :

"அரங்கத்தினுள் நிகழும் எந்தவொரு இழப்பு, திருட்டு, அல்லது தனிப்பட்ட உடைமைகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பொறுப்பல்ல"

அரங்கத்தின் உள்ளே, **ABC Music Centre** இன் விளம்பரக் கூடத்தில், இலங்கையின் பிரபல கலைஞரின் இறுவட்டுக்களினது (CD) வரையறுக்கப்பட்ட பதிப்பு ரூ. 12,500/- விலையில் கிடைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை **ஹாசினி** கவனித்தார். இசை சேகரிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட அவர், அதை வாங்க ஆர்வமாக இருந்தார். இருப்பினும், அதை வாங்குவதற்காக அந்தக் கூடத்தின் ஊழியர்களை அணுகியபோது, அந்த இசைத்தட்டுகள் விற்பனைக்கு அல்ல, காட்சிப்படுத்துவதற்காக மட்டுமே என்று அவர்கள் அவரிடம் தெரிவித்தனர்.

நிகழ்ச்சிக்குப் பிறகு, **தினுகவும் ஹாசினியும்** வாகன நிறுத்துமிடத்திற்குத் திரும்பியபோது, **தினுகவின்** கார் மூடப்பட்டிருந்த யன்னலுடன் சேர்த்து உடைக்கப்பட்டிருப்பதையும் அவருடைய மடிக்கணினி காணாமற் போயிருப்பதையும் அவர்கள் கண்ணுற்றனர். அதே வேளை இசைநிகழ்ச்சிக்கு முன்னர் தனது கைப்பையில் வைத்திருந்த தனது கையடக்கத் தொலைபேசி காணாமற் போயிருப்பதை **ஹாசினி** பின்னர் உணர்ந்து கொண்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரையறுக்கப்பட்ட பதிப்பு இறுவட்டு (CD) தொடர்பில் **ஹாசினி** மற்றும் **ABC Music Centre** இற்கிடையே வலிதான ஒப்பந்தமொன்று உள்ளதா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) தமது இழந்த உடமைகளுக்காக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு எதிரான **தினுக** மற்றும் **ஹாசினியின்** சட்ட உரிமைகள் பற்றி **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(c) பார்வையாளர்களின் பொருள்கள் இழப்பு தொடர்பில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் சட்டரீதியான கடப்பாடுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(B) சுதந்திரமான (freelance) கிராபிக் வடிவமைப்பாளரான **மாலா** என்பவர், தனது வேலைகளுக்காக உயர் செயல்திறன்மிக்க மடிக்கணினியைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்தார். அவர் ஒரு பிரபலமான இலத்திரனியல் கடைக்குச் சென்று, கிராபிக் வடிவமைப்பு (graphic design) மற்றும் வீடியோ எடிட்டிங்கிற்கு (video editing) ஏற்ற, உயர் செயன்முறைத் திறன் (high-processing power) கொண்டதும் சிறந்த காட்சித் தரத்தைக் (excellent display quality) கொண்டதுமான மடிக்கணினி தனக்குத் தேவை என்று விற்பனைப் பிரதிநிதியிடம் தெரிவித்தார். ஒரு குறிப்பிட்ட மொடல் அவரது அனைத்து தொழில்முறைத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் என்று விற்பனைப் பிரதிநிதி அவரிடம் உறுதியளித்தார்.

இந்த ஆலோசனையைப் பின்பற்றி, விரிவான பரிசோதனையொன்றை மேற்கொள்ளாது, **மாலா** மடிக்கணினியைக் கொள்வனவு செய்தார். எவ்வாறாயினும், வீட்டில் மடிக்கணினியை அமைத்த பிறகு (setting up the laptop) அவர் பின்வரும் பல சிக்கல்களை எதிர்கொண்டார் :

(1) காட்சியின் தெளிவுத்திறன் (resolution) குறைவாக இருந்தது, இது உயர்தர வடிவமைப்புளில் வேலை செய்வதைக் கடினமாக்கியது.

(2) மடிக்கணினி அடிக்கடி அதிகமாக வெப்பமடைந்ததால் வீடியோ எடிட்டிங் செய்யப் பொருத்தமற்றதாக ஆக்கியது.

(3) இரண்டு வார பயன்பாட்டிற்குப் பிறகு, பற்றரி சரியாக மின்னேற்றுவதை (charging) நிறுத்தியது. இது அவரது வேலையை மேலும் சீர்குலைத்தது.

விரக்தியடைந்த **மாலா,** கடையைத் தொடர்பு கொண்டார். ஆனால் அவர்கள் பொருளை ஏற்கனவே விற்றுவிட்டதாகக் கூறி, பொருளைத் திரும்பப் பெறவோ அல்லது பணத்தை மீளளிப்புச் செய்யவோ மறுத்துவிட்டனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

மேற்படி விவரணத்திலுள்ள விடயங்களுடன் தொடர்புடைய கீழ்வரும் பகுதிகளை உள்ளடக்கிய **மாலாவின்** சட்டரீதியான உரிமைகளை **விபரிக்குக** :

(a) பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான உட்கிடை நிபந்தனைகளை மீறுதல்.

(b) **மாலாவுக்கு** இருக்கின்ற சட்டரீதியான பரிகாரங்கள் (remedies). (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |